முத்தமிழறிஞர் கலைஞர் 103–வது பிறந்த நாள் விழாவை யொட்டி

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஆதரவற்றோர் - முதியோர் - சிறுவர் இல்லங்களில் உணவு வழங்கல் !

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

நம்முடைய உலக தமிழினத்தின் ஒப்பாரும் - மிக்காரும் இல்லா தனிப்பெரும் தலைவர், இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற பிதாமகன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளான நாளை ஜூன் 3-ஆம் தேதி அன்று

மனிதநேயம் வளர்க்கும் விதமாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட ஆதரவற்றோர் - முதியோர் - சிறுவர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர், முதியோர், சிறுவர்களுக்கும், மனவளர்ச்சிகுன்றிய இல்லங்களில் உள்ள மனவளர்ச்சிகுன்றியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழு நோயாளிகளுக்கும் பகல் உணவு வழங்கப்பட உள்ளது.

நாள் : 03–06–2026 – புதன்கிழமை

வ. எண்	ஆதரவற்றோர் இல்லம் பெயர் – இடம்	நிகழ்ச்சி ஏற்பாடு
	கிருபாஇல்லம், படப்பை	குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் – படப்பை ஊராட்சி
	பிரேமவாசம் ஆதரவற்றோர் இல்லம், கெருகம்பாக்கம்	குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – கெருகம்பாக்கம் ஊராட்சி
	ஆலயம் சிறுவர் இல்லம் பரணிபுத்தூர்	குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – பரணிபுத்தூர்
	லிட்டில் டிராப்ஸ் ஆதரவற்றோர் இல்லம், அய்யப்பந்தாங்கல்	குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – அய்யப்பந்தாங்கல் ஊராட்சி
	மன வளர்ச்சி குன்றியோர் மகிமை இல்லம், செங்கல்பட்டு	செங்கல்பட்டுநகரம்
	அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர்	காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் – வீராபுரம் ஊராட்சி
	சிவானந்த குருகுலம் காட்டாங்குளத்தூர்	மாவட்ட இளைஞர் அணி மறைமலைநகர் நகரம்
	வில்லியம்ஸ் ஊனமுற்றோர் பள்ளி, வண்டலூர்	காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் – வண்டலூர் ஊராட்சி
	யூத்கிறிஸ்டியன் சிறுவர் இல்லம், ஊரப்பாக்கம்	காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் ஊரப்பாக்கம் ஊராட்சி
	இந்தியன் கிறிஸ்டியன் மிஷன் சிறுவர் இல்லம், ஊரப்பாக்கம்	
	சுப்பையாமடம் ஆதரவற்றோர் இல்லம், திருக்கழுக்குன்றம்	திருக்கழுக்குன்றம்வடக்கு ஒன்றியம் – பேரூர்
	குட்லக் சென்டர் ஆதரவற்றோர் சிறுவர் இல்லம், தாம்பரம்	பெருங்களத்தூர் வடக்கு பகுதி
	ஆதரவற்றோர் இல்லம், சேலையூர், தாம்பரம்	தாம்பரம் மேற்கு பகுதி
	சாரதா சக்தி பீடம் ஆதரவற்றோர் இல்லம், பெருங்களத்தூர்	பெருங்களத்தூர் தெற்கு பகுதி
	பவுசிய தீபம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, பெருங்களத்தூர்	
	ஆதரவற்றோர் முதியோர் இல்லம், பீர்க்கன்கரணை	
	அன்னை கருணை இல்லம் ராஜகீழ்ப்பாக்கம்	செம்பாக்கம் தெற்கு பகுதி
	பாபுஜி இல்லம், சிட்லப்பாக்கம்.	
	ரீச் ஆதரவற்றோர் கருணை இல்லம், மாடம்பாக்கம்.	தாம்பரம் கிழக்கு பகுதி
	அன்பகம் மனநலம் குன்றியோர் இல்லம், பனங்காட்டுப்பாக்கம்	திருப்போரூர் வடக்கு ஒன்றியம்
	அட்சயம் இல்லம், முடிச்சூர்	புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் – முடிச்சூர் ஊராட்சி
	ஆதரவு இல்லம், முடிச்சூர்	
	மாரநாதா ஆதரவற்றோர் பள்ளி, மறைமலைநகர்	மறைமலைநகர் நகரம்
	உதவும் உள்ளங்கள் முதியோர் இல்லம், கோகுலபுரம், மறைமலைநகர்	
	இன்பார்ம் மனவளர்ச்சி குன்றியோர் இல்லம் வல்லாஞ்சேரி, மறைமலை நகர்	
	விதை ஆதரவற்றோர் குழந்தைகள் காப்பகம், வி.பி.ஆர் சத்திரம், திருப்பெரும்புதூர்	திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – திருப்பெரும்புதூர் பேரூர்
	நியூலைப் ஆதரவற்றோர் முதியோர் இல்லம், எறையூர்	திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – எறையூர் ஊராட்சி
	ஆதரவற்ற குழந்தைகள் நம்பிக்கை இல்லம், வெங்காடு	திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – வெண்காடு ஊராட்சி
	புனித தோமையர் குழந்தைகள் பாதுகாப்பு இல்லம்	திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – தண்டலம் ஊராட்சி
	வெண்பா முதியோர் இல்லம், மாமல்லபுரம்	மாமல்லபுரம் நகரம்
	பாபா குருகுலம், பொழிச்சலூர்	புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் – பொழிச்சலூர் ஊராட்சி

எனவே அந்தந்த மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழகச் செயலாளர்கள் ஆதரவற்றோர் இல்லங்களில் இந்த அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஏற்பாடுசெய்து மிகவும் எழுச்சியுடன் இந்த ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தா.மோ.அன்பரசன்,
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்

சென்னை கிழக்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 2-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை புத்தெழுச்சி நாளாக அனைவரும் வியக்கும் வண்ணம் கொண்டாடுவீர் என சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

1949-ல் சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் பேரறிஞர் அண்ணாவால் துவக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளகர்த்தராய் இணைத்துக் கொண்டு... பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, பாலைவனத்திலும், சோலை

வனத்திலும் பயணம் செய்து கழகத்தை வழி நடத்திய வரும். இந்திய ஜனநாயக போரில் அரசியல் அரணாக நின்றவரும். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு குந்தகம் ஏற்படாமல் பாதுகாவலராக இருந்தவரும்.. மதச்சார்பற்ற இந்தியாவை காப்பதில் தலையாய தலைவராய் முன்நின்றவரும் தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பதில் தன்னை முழுமூச்சாக ஒப்படைத்துக் கொண்டவரும்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளை ஆட்சியிலும் கட்சியிலும் நடைமுறைப்படுத்திசமூக நிதியை காத்தவருமான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய 103 வது பிறந்தநாளான ஜூன் 3 அன்று கழகத் தலைவர் முரசொலியில் உங்களில் ஒருவன் கடிதத்தில் குறிப்பிட்டது போல சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 13 பகுதிகளிலும் 83 வட்டங்களிலும், காலையிலேயே இருவண்ண கொடியேற்றி அன்னாரின் புகைப்படத்தை அலங்கரித்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மூத்த கழக முன்னாடிகளுக்கும், மகளிர் அணியினருக்கும், இளைஞரணியினருக்கும், நலிந்தவருக்கும் ஏழைகளுக்கும் தேவையான உதவிகள் செய்து சீரும் சிறப்புமாக கொண்டாடுவதைப் பார்த்து கழகத்தினரும், பொது மக்களும்.மாற்றோரும் எப்படி இவர்களால் தோல்வி கண்டும் துவண்டு விடாமல் இவ்வளவு எழுச்சியுடன் கொண்டாடுகிறார்கள் என்று வியக்கும் வண்ணம் கொண்டாடுவீர்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு அறிக்கை விடுத்துள்ளார்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

சென்னை வடக்கு மாவட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பின்படி சட்டமன்றத் தேர்தல் குறித்து கள ஆய்வுக் குழுவினர் மாநில அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, மாநில மகளிர், தொண்டரணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் கீழ்க்கண்ட விவரப்படி கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

2-6-26 - இராயபுரம் பகுதி - 'அறிவகம்' திருமண மாளிகை.

4-6-26 - பெரம்பூர் பகுதி - பிரிணீதா மஹால் - எத்திராஜ் சாமி சாலை, எருக்கஞ்சேரி.

6-6-26 - ஆர்.கே.நகர் பகுதி - லதாஸ் பார்டி ஹால், டி.எச்.ரோடு.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.06.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை மேற்கு மாவட்ட

அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் அறிக்கை!

சென்னை, ஜூன். 02 -

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (02.06.2026 - செவ்வாய்கிழமை) மாலை 6 மணிக்கு, நுங்கம்பாக்கம், காம்தார் நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில், மாநில துணைச் செயலாளர் எஸ்.ராம்குமார் முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. கழக ஆக்க பணிகள்

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்:

மாதவரம் 30(அ) வட்டத்தில் மாற்றுத்திறனாளி இல்ல மாணவர்களுக்கு அறுசுவை உணவு!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்குகிறார் – டி.சுந்தரம் அறிக்கை!

சென்னை, ஜூன் 2

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 (அ) வட்டக் கழகத்தின் சார்பில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் ஏழை எளியவர்களின் வாழ்வில் முன்னேற்றம் . பெண்களுக்கு சொத்தில் சம பங்கு சமூகநீதி சமத்துவம். நவீன கால சிற்பி. கன்னித் தமிழை கணினித் தமிழாக உருவாக்கியவர் இந்திய திருநாட்டின் தலைசிறந்த முதல்வராக விளங்கியவர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வட்ட தலைவர் இ.ராமன் தலைமையில் நாளை (3.6.2026) காலை 8 மணி அளவில் விநாயகபுரம் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து கழகத் தலைவர் கலைஞரின் உருவப்படத்திற்கு மலர் தூவி கழக கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கி, விநாயகபுரம் சமாப்பணம் இல்ல மாணவர்களுடன் மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் கேக் வெட்டி காலை சிற்றுண்டி வழங்கி கொண்டாட இருக்கின்றார்கள்.

அதுபோது பகுதி கழக செயலாளர் ஜி துக்காராம் எஸ் நந்தகோபால் இ ஏழுமலை திருமலை ஜி துரை சாமி மருத்துவர் அணியும் மாவட்ட அமைப்பாளர் டாக்டர் ஜி பார்த்தசாரதி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் லட்சுமி காந்தன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.பி. கண்ணன், பி.வி.ராஜு, பரமேஸ்வரி, அபிப் ரகுமான், எஸ்.என். ராஜி, ஏ.வி.முருகன், எம்.சீனிவாசன், கே. என். நரேந்திரன், பிஎஸ்என்எல் குமார், எல். சண்முகம், சி. உமா மகேஸ்வரி, த. கவி பிரியா, விக்னேஷ், வெற்றிவேல், தீபக், மோகனப்பிரியா, நளினி, எஸ் அஜித், காஞ்சி சண்முகம், வெங்கட்ராமன், கருணாநிதி , டி.எஸ். உதயநிதி, டிவி எஸ் கோபி, சக்கரபாணி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே வட்டக் கழக உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணி, இளைஞரணி திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 131 'அ' வட்டம் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்! அறுசுவை உணவு!

வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை,ஜூன்.2-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தி.நகர் கிழக்கு பகுதி. 131 'அ' வட்டம் சார்பில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, 131 'அ வட்ட கழகம் சார்பில் வருகின்ற 03062026 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி ஆற்காடு சாலையில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா பொதுநல மன்றத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர், மயிலை. த.வேலு, தியாகராயர் மேற்கு, கிழக்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், எம்.விஜயகுமார், ஜெ.சீனிவாசன், ஜி.மோகன் ராஜ், ஏ.பக்ருதீன், ராசிமுருகன் உட்பட கழக முன்னோடிகள் கலந்துகொள்ள உள்ளனர்.

ஆகவே, வட்டக்கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எஸ்.புகழேந்தி தலைமை ! 52வது வட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! 400 நபர்களுக்கு உணவு !

ஆர்.டி.சேகர் வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - அ.சுபேர்கான் - வ.பெ.சுரேஷ் பங்கேற்பு!

சென்னை, ஜூன்.02

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி அறுசுவை மற்றும் 400 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (03.06.2026 புதன்கிழமை) தாளமுத்து மன்றம் அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர். எஸ்.புகழேந்தி தலைமை வகிக்கிறார்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் உணவு வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, டாக்டர் சுபேர்கான், பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், தா.இளைய அருணா, ந.மனோகரன், மு.கோபி, நாகம்மை, நா.சண்முகம், கி.ராஜேந்திரன்,

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பிஎல்ஏ2, பிஎல்சி, மற்றும் பிடிஏ, அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்பாறு வட்டச்செயலாளர் எஸ்.புகழேந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதியில்

ஜூன்-3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

பகுதிச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை,ஜூன்.2-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி ஜூன் 3 அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்து பகுதிச் செயலாளர் ப.குணாளன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

156- வது வட்டம்.

1).வட்டச் செயலாளர். ஜெ.செல்வேந்திரன் தலைமையில் முகலிவாக்கம் அரசமரம் அருகே தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி.கழக கொடியேற்றி சுமார் 300 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்குதல். 2). வட்ட துணை செயலாளர் ரங்க.முனுசாமி ஏற்பாட்டில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல். 3).பகுதி பிரதிநிதி அவர்.வி.பிரபு ஏற்பாட்டில் கழக கொடியேற்றி சுமார் 200 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல். 4).வட்ட பொருளாளர் அ.கார்த்திகேயன் ஏற்பாட்டில் மனவளர்ச்சி குன்றியவர்கள் உள்ள ஆசிரமத்தில் மதியம் அறுசுவை உணவு வழங்குதல். 5).பகுதி பிரதிநிதி கோ.சரவணன் ஏற்பாட்டில் பள்ளி பயிலும் மாணாக்கர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். மற்றும் பகுதிகளில் உள்ள அனைத்து கொடிகம்பங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

157-வது வட்டம்

வட்டச் செயலாளர் டி.ரவி ஏற்பாட்டில் வட்ட கழக அலுவலகமான அண்ணா மன்றத்தில் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி.கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்குதல்.மற்றும் பகுதிகளில் உள்ள அனைத்து கொடிகம்பங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

158-வது வட்டம்.

1). மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ஜெ.குமரன் அவர்களின் ஏற்பாட்டில் கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மற்றும் கழக கொடியேற்றி சுமார் 250 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல்.மற்றும் பகுதிகளில் உள்ள அனைத்து கொடிகம்பங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

159-வது வட்டம்.

வட்டச் செயலாளர் ப.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஏற்பாட்டில் மீனம்பாக்கம் ஜி.எஸ்.டி. சாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி மற்றும் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்பு வழங்குதல்.பகுதிகளில் உள்ள அனைத்து கொடிகம்பங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

160-வது வட்டம்.

1). வட்டச் செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் ஏற்பாட்டில் ஆலந்தூர்.மிசா.ம.ஆபிரகாம் இல்லம் அருகே

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி மற்றும் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குதல். மற்றும் பிற்பகல் 11:00 மணியளவில் ஆலந்தூர் புது தெருவிலுள்ள ஆவின் பால் நிலையம் அருகே சுமார் 300 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்.

161-வது வட்டம்.

1). வட்டச் செயலாளர் எம்.ஆர். சீனிவாசன் ஏற்பாட்டில் ஆலந்தூர் எம்.சி.ராஜா தெருவில் அமைந்துள்ள கழக அலுவலகமான ஆபிரகாம் மன்றத்தில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்குதல்.பிற்பகல் 11:00 மணியளவில் ஆலந்தூர் ராஜா தெரு பரங்கிமலை சந்திப்பில் சுமார் 300 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்குதல்.

பகுதிகளில் உள்ள அனைத்து கொடிகம்பங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

ஆலந்தூர் வடக்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள்,பாக நிர்வாகிகள்,கழகத் தோழர்கள் அந்த வட்டங்களில்நடைபெறும்நிகழ்ச்சிகளில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதி கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ்.ராஜசேகர், ஜி மகாதேவன் இசட் ஆசாத், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ரஞ்சித் விஜயாலயன்,கா.பா. பிரதீப் குமார், பி.விஜயகுமார், எல் சம்பத்குமார் மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.